# கேள்வி கேட்டல்வழிக் கதையைப் புரிந்துகொள்ளுதல்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 4
# ‘நான்’

**கண்ணோட்டம்:**

ஆசிரியர் கேட்கும் தூண்டுதல், துருவுதல் வினாக்களுக்கு விடையளிப்பதன்வழிப் பிள்ளைகள் பெரிய புத்தகத்தில் உள்ள கதையை ஆழமாகப் புரிந்துகொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**
   - ✓ தாய்மொழி நடவடிக்கைகளின்போது கேள்விகள் கேட்டல்

**பெரிய புத்தகத்தை வாசிப்பதற்கான பொதுவான படிநிலைகளைப் பின்பற்றி இந்தப் புத்தகத்தைப் பிள்ளைகளுக்குப் படித்துக்காட்டுங்கள். அதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் கேள்விகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.**

**பக்கம் 2 & 3**

| தகவலை நினைவுகூர்தல் | ஊகித்தல் |
|---|---|
| இவர்கள் எங்கே இருக்கிறார்கள்? | அப்பா தம் பிள்ளைகளிடம் என்ன கேட்கிறார் என்று நினைக்கிறீர்கள்? |
| இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? | |

## பக்கம் 4

**தகவலை நினைவுகூர்தல்**

கயல் என்ன சொல்கிறாள்?

கலைவாணி என்ன சொல்கிறாள்?

## பக்கம் 5

**தகவலை நினைவுகூர்தல்**

கலைவாணி கவினிடம் என்ன கேட்கிறாள்?

**காரணக்காரியத் தொடர்பைப்பகுத்தாய்தல்**

கதிர், கயல், கலைவாணி ஆகியோர் ஏன் கவினை ஆவலோடு பார்க்கிறார்கள்?

## பக்கம் 6 & 7

**காரணக்காரியத் தொடர்பைப்பகுத்தாய்தல்**

கவின் என்ன சொல்கிறான் என்று நினைக்கிறீர்கள்? ஏன்?

**ஊகித்தல்**

கலைவாணியும் கயலும் ஏன் சிரிக்கிறார்கள்?

**சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல்**

நீங்கள் காவல் அதிகாரியைப் பார்த்திருக்கிறீர்களா? எங்கே? எப்போது? ஏன்?

## பக்கம் 8 & 9

**புரிந்துணர்தல்**

தாத்தா கலைவாணியிடம் என்ன கேட்கிறார்?

கலைவாணி அதற்கு என்ன பதில் சொல்கிறாள்?

**ஊகித்தல்**

நீங்கள் தாதியைப் பார்த்திருக்கிறீர்களா? அவர் என்ன செய்வார்?

## பக்கம் 10

**ஊகித்தல்**

பாட்டி என்ன கேட்கிறார் என்று நினைக்கிறீர்கள்?

கயல் பாட்டியிடம் என்ன கூறியிருப்பாள்?

## பக்கம் 11

**புரிந்துணர்தல்**

கதிர் என்ன செய்கிறான்?

பாட்டி ஏன் கதிரை ஆச்சரியமாகப் பார்க்கிறார்?

**சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல்**

உங்களுக்குப் பிடித்த ஆசிரியர் யார்? ஏன்?

## பக்கம் 13

**சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல்**

தீயணைப்பாளரைப் பார்த்திருக்கிறீர்களா? அவர் என்ன செய்வார்?

**ஊகித்தல்**

கதிர் என்ன சொல்லியிருப்பான்?

## பக்கம் 14 & 15

**புரிந்துணர்தல்**

அம்மாவின் கையில் என்ன இருக்கிறது?

கலைவாணி என்ன செய்கிறாள்?

கவின் என்ன சொல்கிறான்?

கதிர் என்ன சொல்லியிருப்பான்?

**பக்கம் 16**

**புரிந்துணர்தல்**

அம்மா என்ன சொல்லியிருப்பார்?

கதிரின் கையில் என்ன இருக்கிறது?

கதிரின் கையில் என்ன இருக்கிறது?

******************************